பெரம்பலூர் நகரில் ஆதி திராவிட மக்கள் பெருமளவில் வசிக்கின்றார்கள். அவர்கள் தங்களுடைய வீட்டு சுப காரியங்களை நடத்திக் கொள்வதற்கு சமுதாயக் கூடம் ஒன்று தேவைப்படுகிறது. ஆதி திராவிட மக்களுக்கு அள்ளி, அள்ளித் தருகின்ற அம்மாவின் அட்சய பாத்திர அரசு, அங்கு சமுதாயக் கூடம் அமைக்க முன்வருமா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

19—

பேருந்து வசதி

***1756—திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, வந்தவாசி–மருதாடு, வழூர், சாத்தனூர், கீழ்நர்மா வழியாக உத்திரமேரூருக்குப் புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வந்தவாசியை மையமாகக் கொண்டு புதிய நகர வழித்தடங்களில் பேருந்து இயக்க மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று வந்தவாசி, மருதாடு, வழூர், சாத்தனூர், கீழ்நர்மா வழியாக உத்திரமேரூருக்குப் புதிய நகரப் பேருந்து இயக்க முன்னுரிமை அளித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2012 *பிப்ரவரி* 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.*

திரு. வே. குணசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, திருவண்ணாமலை மாவட்டம், என்னுடைய வந்தவாசி தொகுதியிலே மருதாடு, வழூர், சாத்தனூர், கீழ்நர்மா வழியாக உத்திரமேரூருக்குப் புதிய பேருந்து இயக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு என்னுடைய தொகுதியின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

20—

இட ஒதுக்கீடு

*__*7129__—திரு. இரா. துரைக்கண்ணு:*

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இஸ்லாமியப் பெருமக்கள் புனிதப் பயணமான ஹஜ் பயணம் மேற்கொள்வதற்கு மத்திய அரசிடம் கூடுதல் இட ஒதுக்கீடு பெற்றுத் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்தக் கேள்விக்குரிய பதில் சொல்லும் நேரத்தில், இதற்கு எனக்கு வாய்ப்பளித்த எங்கள்*